மனைப்பிரிவு அனுமதி

குள்ளம்பாளையம் ஊராட்சித் தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. T.அர்ச்சுணன் M.Com.,

ந.க.எண்:02/2023-24/ம.பி.அ.

நாள்:11.07.2023

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - குள்ளம்பாளையம் ஊராட்சி ரீ.ச.எண்:51/12B2A-ல் 2.10 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு ஊராட்சியின் அனுமதி அளித்து உத்தரவிடல் சார்பு..

பார்வை:
1. அரசாணை எண்:255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்:18.08.1997
2. அரசாணை எண்:79 வீட்டு வசதி மற்றும் நகர்புறவசதித்துறை நாள்:04.05.2017
3. சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ நாள்:24.12.2020
4. ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ஆணை எண்: SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No.96/2023. நாள்: 08.02.2023
5. குள்ளம்பாளையம் ஊராட்சி தலைவர் மற்றும் ஊராட்சி செயலாளரின் கூட்டுத் தல ஆய்வு நாள்:03.07.2023
6. இவ்வலுவலக குறிப்பாணை கடிதம் நாள்:03.07.2023
7. குள்ளம்பாளையம் ஊராட்சி தீர்மானம் எண்:81/2023 நாள்:10.07.2023

.....

உத்தரவு:

பார்வை 4-ல் கண்டுள்ளவாறு பெருந்துறை வட்டாரம் குள்ளம்பாளையம் ஊராட்சி ரீ.ச.எண்: 51/12B2A -ல் 2.10 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 5-ல் கண்டுள்ளவாறு மேற்படி மனைப்பிரிவு அமைக்கப்படும் இடம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் கீழ்காணும் விவரம்படி கட்டணத் தொகை மனுதாரரால் ஊராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்.	கட்டண விவரம்	தொகை (ரூ)
01	ஆய்வுக்கட்டணம்	1000/-
02	அனுமதிக்கட்டணம் (ஏக்கர் 1-க்கு ரூ.1000/- வீதம்)	2100/-
03	கூடுதல் வரைபடக் கட்டணம் (நகல் 1-க்கு ரூ.100/- வீதம்)	100/-
	மொத்தம்	3200/-

மேலும் நிலப் பயன்பாட்டு மாற்றுக் கட்டணமாக மனைப்பிரிவு அமைக்கப்படும் இடத்தின் அரசு வழிகாட்டு மதிப்பீட்டில் 3% தொகை ரூ.16884/- உரிய அரசுத் தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பார்வை 7-ல் கண்டுள்ளபடி, மேற்படி மனைப்பிரிவிற்கு குள்ளம்பாளையம் ஊராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 1- மற்றும் 2-ல் கண்டுள்ள அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டும் பின்வரும்

நிபந்தனைகளுக்குட்பட்டும் கீழ்காணும் விவரம்படி மனைப்பிரிவு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மனைப்பிரிவின் பெயர்	:	வேலா கார்டன்
மனைப்பிரிவு உரிமையாளர் பெயர்	:	திரு.ரஞ்சன் மற்றும் 5 நபர்கள்
ரீ.ச.எண்	:	51/12B2A
மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு	:	2.10 ஏக்கர் (அ) 8500 ச.மீ.
மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு	:	2410.36 ச.மீ
ஒதுக்கிய பூங்கா பரப்பளவு	:	608.96 ச.மீ (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)
ஊராட்சி பொது உபயோக இடம் பரப்பளவு	:	33.81 ச.மீ.
TNEB பொது உபயோக இடம் பரப்பளவு	:	30.44 ச.மீ
விற்பனைக்காக ஒதுக்கிய மனைகள் (EWS மனைகள் சேர்த்து)	:	34 (மனை எண் 1 முதல் 34 வரை)
தற்போது ஊராட்சியால் அனுமதியளிக்கப்படும் மனைகள் (EWS மனைகள் சேர்த்து)	:	34 (மனை எண் 1 முதல் 34 வரை)

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மற்றும் குள்ளம்பாளையம் ஊராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் ஊராட்சியின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் ஊராட்சியால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.
3. ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படும் சாலைகள் , பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை உட்பிரிவு செய்து கொடுக்கப்படவேண்டும்.
4. மனைப்பிரிவில் அமையப்படும் சாலைகளில் ஈரடுக்கு கப்பிபரத்தி தரமான முறையில் தார்சாலை அமைத்துத் தரப்பட வேண்டும். மேலும் ஒன்றியப் பொறியாளரின் தரச்சான்று பெற்று ஊராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
5. ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படும் பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களுக்கு கம்பிவேலி அமைத்துத் தரப்பட வேண்டும்.
6. மனைகள் மற்றும் தெருக்கள், தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு எல்லைக் கற்களால் வரையறுக்கப்படவேண்டும். மனைப்பிரிவிற்கு வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக்கொண்டு செயல் அலுவலரால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்பட வேண்டும்.
7. மனைப்பிரிவில் தேவையான இடங்களில் பாலங்கள், மழைநீர் வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்குகள், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் குடிநிர் குழாய் ஆகிய வசதிகள், செயல் அலுவலரின் கருத்திற்கு மனுதாரர் அமைத்துத் தரவேண்டும்.
8. மனைப்பிரிவில் அமையும் பொது உபயோக ஆழகுழாய்கிணறு மின்மோட்டார் மின் இனைப்பு மற்றும் தெருவிளக்குகள் மின் இணைப்பு ஆகியவற்றை ஊராட்சியின் பெயரில் பெயர் மாற்றம் செய்து தரப்பட வேண்டும்.
9. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கபட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு(Splay) அமைக்கப்பட வேண்டும்.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
11. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7மீ.(23 அடி) மற்றும் 9மீ.(30 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீ.(5 அடி), 12 மீ.க்கு(40 அடி) மேல் மற்றும் 15 மீ.(50 அடி) அகலதிற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீ.(10 அடி) 15 மீ.(50 அடி) அகலத்திற்கும் மேலும் 24 மீ.(80 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6மீ.(20 அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8மீ(6 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எவ்வித கட்டடமோ சுவரோ கட்டுதல் கூடாது.
13. மனையின் பக்க எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீ. திறவெளி விடப்பட வேண்டும். இந்தப் பின்பக்க திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்துவண்டி நிறுத்தம் கொட்டகை போன்றவை அல்லது அவைபோன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைசார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம்.
14. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.
15. கடைக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.
16. மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி வ.எண் 12 முதல் 15 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களில் பகுதியாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.
17. 9 மீ. அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9 மீ. தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீ.க்குள் அமைக்கப்பட வேண்டும்.
18. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்குமுன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஊராட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.
19. மனையின் ஊடே குறந்த அழுத்த/உயர் அழுத்த மின் கம்பிப் பாதை தந்திக் கம்பிப் பாதை அமைந்ததால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கு மாற்றியமைக்கபட வேண்டும்.
20. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலினைக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் ஊராட்சியால் வழங்கப்படும் அனுமதி ஆணை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
21. மனுதாரர், குள்ளம்பாளையம் ஊராட்சி செயல் அலுவலரிடமிருந்து மனைப்பிரிவு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு

மனைப்பிரிவு நுழைவாயிலில் 6•4 அளவிளான நிரந்த தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காக நிரந்தரமாக பிரசுரிக்கபட வேண்டும்.

22. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறை மற்றும் ஊராட்சியால் ஒப்புதல் அளிக்கப்பட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

23. மேற்படி வ.எண் -1 முதல் 22 வரையிலான நிபந்தனைகளை செயல்படுத்திடத் தவறும் பட்சத்தில் ஊராட்சியால் வழங்கப்படும் இந்த அனுமதி ஆணை எவ்வித முன்அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

தலைவர் / செயல் அலுவலர்,
குள்ளம்பாளையம் ஊராட்சி.

பெறுதல்:

திரு.ரஞ்சன் மற்றும் 5 நபர்கள்

நகல்: நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், ஈரோடு மண்டலம், ஈரோடு.
நகல்: சார் பதிவாளர், பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), பெருந்துறை வட்டாரம்.

Government of Tamil Nadu

E-Challan

Payable at - ST PERUNDURAI

Remitter Copy

hallan Number	20230706045672	**Challan Date**	06-Jul-2023	**Payment Date**	
emitter Type	Public	**Remitter Code**	30	**Remitter Name**	Rajan & 5 Members
obile No.	8838816320	**Aadhaar No.**		**Remitter Address**	Perundurai
epartment	02602-Directorate of Town and Country Planning	**District**	ERODE	**DDO Code**	05070051
DO / Office Name	BLOCK DEVELOPMENT OFFICER(VP) PERUNDURAI	**Department Transaction ID**		**Office Name**	

Receipt Type	Sub Type	Acct Code	Amount	Reference No.	Remark
Collections- DoTP	Collections- DoTP	021703800AA22709	16884	Town planning	Land convertion fees

ayment Mode	Offline	**Payment Type**	Cash	**Payment Status**	Pending
hallan Amount (Rs.)	16884			**Bank Name**	IOB
mount (in words)	Sixteen Thousand Eight Hundred Eighty Four Rupees only.			**Bank ref no.**	23187101212748

Remitter Signature

For Bank Use 9994908685 - 6 JUL 2023

Bank Branch Stamp and Signature of Cashier

Manager/Accountant

Please Note*, Department Transaction ID and Office Name fields are created only for 4 interface department Registration and Transport and CT for there specific requirements and the values entered in this fields are values passed by them not from IFHRMS.

500 x 34 = 17,000

cdlvs - 4

S2 17118 29

ஊராட்சி படிவம் எண் : 6

பலவகை வரவு ரசீது

அசல்

புத்தக எண் :

பற்றுச்சீட்டு எண் : 35023

.....கிள்ளம்பாளையம்.....ஊராட்சி

நாள் : 08.07.2023

திரு. பெள்ளன்...மாதம்...5...ரூபாய்கள்....கிராமம். ...பெரியபாளை..... என்பவரிடமிருந்து

ரூபாய்.....3200-..... (ரூபாய்...மூன்றாயிரத்து...இருநூறு...-x-..... மட்டும்)

.....வீ.வரன்...51/2024...மனையிடம்.. வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது.

சாமான்

பணம் செலுத்துபவரின் கையொப்பம்

Panchayat Secretary,
Kuilampalayam Panchayat

ஊராட்சித் தலைவர்

தலைவர்,
குள்ளம்பாளையம் ஊராட்சி,
பெரியபாளையம்.

குறிப்பு :

1. இந்த பற்றுச் சீட்டு ஊராட்சித் தலைவரின் Facsimile - யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும்இருந்தால்தான் செல்லுபடியாகும்.
2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெறப்படவேண்டும்.

சாலை பரப்பு:-

சாலை-1

$\frac{121.3 + 118.7}{2}$ X 10.0 = 1200.00 ச.மீ

சாலை -2

40.7 X 7.2 = 293.04 ச.மீ

சாலை -3

40.9 X 9.0 = 368.10 ச.மீ

சாலை -4

18.3 X 9.0 = 164.70 ச.மீ

சாலை -5

41.1 X 9.0 = 369.90 ச.மீ

முலை முடுக்கு 7 x 1.125 = 7.87 ச.மீ
2 x 3.375 = 6.75 ச.மீ

மொத்தம் = 2410.36 ச.மீ

பொது ஒதுக்கீடுகள்

பொது உபயோகம் -(A):-


6.9 x 4.9 = 33.81 ச.மீ

பொது உபயோகம் -(B):-

(6.9 x 5.2) - 1.125 = 34.75 ச.மீ

ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக மனைப்பிரிவு அனுமதி எண் :- 96/2022-ன்படி தொழிற்நுட்ப அனுமதி வழங்கியபடி இன்னம்பாளையம் ஊராட்சி நீர்மான எண் :- 81/10.07.23, நாள் :- 10.07.2023-ன் படி ஊராட்சி மன்ற தீர்மானத்தின்படி இன்னம்பாளையம் ஊராட்சி தலைவர்/செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் :- 02/2023-24/மு.பி.அ. நாள் :- 11.07.2023-ன் படி இம்மனைப் பிரிவு வரைபடம் அனுமதிக்கப்-பட்டுள்ளது.

தலைவர்
குள்ளம்பாளையம் ஊராட்சி,
பெருந்துறை வட்டாரம்.



மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

பெருந்துறை ஊராட்சி ஒன்றியம்

குள்ளம்பாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குள்ளம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், ஈ.ச.எண்-51/12B2A-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலை மற்றும் பொது உபயோக அமைப்பு வரைபடம் திட்டமில்லாத பகுதி)

அளவு : 1 அங்குலம் = 33 அடி (1:400)

ONLINE APPLICATION NO: 93GPGECT

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 2.10 ஏக்கர் (அ) 8500.00 ச.மீ

கோரிய மனைகள் : 34

ஒதுக்கிய மனைகள் : 34

மனைப்பிரிவின் எல்லை ----------

நிலையிலுள்ள சாலை ----------

வ

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை

மனைப்பிரிவின் சாலை : 2410.36 ச.மீ

பூங்கா : {மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு}x10%

: {8500.00 - 2410.36} x 10% = 608.96 ச.மீ (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட உள்ளது)

பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தேவையான பரப்பு. : {மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு}x 1.0%

: {8500.00 - 2410.36} x 1.0% = 60.89 ச.மீ (0.5% = 30.44 ச.மீ)

பொது உபயோகம் - (A) : 33.81 ச.மீ (0.55%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு (அ) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை

பொது உபயோகம் - (B) : 34.75 ச.மீ (0.57%)

கட்டிட வரம்பு :

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்
9.0மீ-க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

முலை முடக்கு:

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்
12.0மீ க்கு மேல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்

1. அரசாணை எண்-13 நதி மற்றும் குநீல துறை நாள் 04.02.2019 மு அரசாணை எண்-16 நதி மற்றும் குநீல நாள் 31.01.2020 ன் படி மனைப்பிரிவு சாலை, 0.5% பூமி உள்ளாட்சிக்கும் மற்றும் 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ONLINE APPLICATION NO: 93GPGECT

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

Document certified by P Kavitha
Signed by: Assistant Director
Location: Erode
Date: 2022.